வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 7.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

சந்தாலி கலாச்சாரம் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் நல்லிணக்கத்தில் ஆழமாக வேறூன்றி உள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

டி-20 ஆடவர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி அகமதாபாத்தில் இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே நாளை நடைபெற உள்ளது.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, மேற்குவங்கம் டார்ஜிலிங்கில் நடைபெற்ற 9-ஆவது சர்வதேச சந்தால் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். சந்தாலி கலாச்சாரம் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் நல்லிணக்கத்தில் ஆழமாக வேறூன்றி உள்ளதாக திருமதி முர்மு கூறினார். முன்னதாக, மேற்குவங்காளத்தின் பாக்டோக்ரா விமானநிலையத்தில் திருமதி முர்முவை மத்திய பழங்குடியின விவகாரங்களுக்கான இணை அமைச்சர் திரு துர்கா தாஸ் உய்கி வரவேற்றார்.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை புதுடெல்லியில், மொத்தம் 33 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறுபல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். டெல்லியில் போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் 18 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார். 5-ஆம் கட்ட விரிவாக்கத்தின் கீழ் 16 கிலோமீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள 3 புதிய வழித் தடங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார். மேலும் மத்திய அரசு ஊழியர்களுக்கான பொது குடியிருப்பு விடுதி மறுமேம்பாட்டு திட்டத்தின் கீழ் 15 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டிட திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

பிரதமர்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் நடைபெற உள்ள இந்த நிதியாண்டிற்கான பட்ஜெட்டிற்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் காணொளி வாயிலாக உரையாற்ற உள்ளார். இதில் கல்வி, திறன் மற்றும் அனிமேஷன், காட்சி விளைவுகள், கேமிங் மற்றும் காமிக்ஸ் மற்றும் படைப்பாளர் பொருளாதார சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த 2026-27 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட முக்கிய முயற்சிகள்

குறித்து விவாதிக்கப்பட உள்ளது. படைப்பாற்றல் திறமைகளை வளர்ப்பதை நோக்கமாக கொண்ட 15 ஆயிரம் பள்ளிகள் மற்றும் 500 உயர்கல்வி நிறுவனங்களில் AVGC கண்டென்ட் கிரியேட்டர் ஆய்வகங்களை செயல்படுத்துவதில் இந்த அமர்வு கவனம் செலுத்தும்.

*மகளிர் தினம்-*

சர்வதேச மகளிர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

மகளிர் தினம் குறித்த மேலும் சில தகவல்கள்……….

(வாய்ஸ்)

நாளை கொண்டாடப்பட உள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார். பெண்கள், தேசத்தின் அடித்தளம் என்றும், கல்வி, சுயசார்பு மற்றும் அதிகாரம் பெற்ற பெண்கள் வளமான மற்றும் முற்போக்கான தேசத்திற்கு உறுதியான பங்கை அளிக்க முடியும் என்றும் அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். மேலும் கல்வி, அறிவியல், விளையாட்டு, கலை, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் பெண்கள் தங்களது திறமைகளையும் கடின உழைப்பையும் வெளிப்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி அனைத்து மகளிருக்கும் தமது மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். மேலும் தேசக் கட்டுமானத்தில் பெண்களின் பங்கு குறித்த மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணாதேவி எழுதிய கட்டுரையை பிரதமர் இன்று பகிர்ந்து கொண்டார். இந்தியாவின் கதை அதன் பெண்களின் வலிமையால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் அது ஒரு வளமான வரலாற்று மரபில் இருந்து பெறப்பட்டது என்றும் பிரதமர் சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார். வளர்ந்த நாடாக இந்தியாவை மாற்றும் பயணத்தில், பராமரிப்பு பொருளாதாரம் ஒரு

முக்கிய அடித்தளம் என்பதை அன்னபூர்ணா தேவியின் கட்டுரை வலியுறுத்தி உள்ளதையும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**அனைத்து மகளிர் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள், நீதி, நடவடிக்கை** என்ற கருப்பொருளில் நாளை சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி நாடு முழுவதும் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக நாளை புதுடெல்லியில் சக்தி நடைபயணம் என்ற தலைப்பில் மகளிர் பங்கேற்கும் நடை பயணம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நடைபயணம் காலை 7.30 மணிக்கு இண்டியா கேட்-டில் தொடங்கி கர்த்தவ்ய பாதை வழியாக சென்று காலை 10 மணி அளவில் விஜய்சவ்க் சென்றடையும். தோராயமாக 2 கிலோமீட்டர் நீளம் கொண்ட இந்த சக்தி நடைபயணம் பல்வேறு துறைகளில் பெண்களின் தலைமை பண்பினை கொண்டாடும் வகையிலும் பெண்கள் பாதுகாப்பு, மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் அரசின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துதலையும் நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகிறது.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணம் பெண்களின் வளர்ச்சியில் இருந்து பெண்களின் தலைமை என்ற வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது. கல்வி, சுகாதாரம், நிதி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவற்றை விரிவுபடுத்தி பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான சூழலையும் வலுப்படுத்துகிறது. மேலும் சுயஉதவிக் குழுக்கள், தொழில் முனைவோர் உள்ளிட்ட அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவுகின்றது.

குடும்ப முன்னேற்றத்திற்கும், சமூக வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பெண்கள் ஆற்றும் பங்கு அளவிட முடியாதது என, புதுச்சேரி, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். மகளிர் தினத்தை முன்னிட்டு, அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கல்வி, சுகாதாரம், தொழில், நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், பெண்கள்

தங்கள் திறமையால் சிறந்து விளங்கி, சமுதாயத்திற்கு பெருமை சேர்த்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் தினத்தில் பெண்கள் அனைவரும் பூரண நலத்துடனும், நிறைந்த மகிழ்ச்சியுடனும் அனைத்து துறைகளிலும் மேன்மேலும் முன்னேறி சாதனை படைக்க வேண்டும் என்றும் திரு ரங்கசாமி தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

*உதவி எண்கள்*

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர் பதற்றத்தைக் கருத்தில் கொண்டு கத்தாரில் உள்ள இந்திய குடிமக்களுக்கு உதவ தோகாவில் உள்ள இந்திய தூதரகம் கூடுதல் உதவி எண்களை அறிவித்துள்ளது. அதன்படி, 974 – 55 64 75 02, 974 - 55 36 25 08 மற்றும் 974 - 55 38 46 83 ஆகிய எண்களில், 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு உதவி கோரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பெட்ரோலிய எரிபொருட்கள்*

மேற்கு ஆசியாவில் பதற்றமான சூழல் நிலவி வருவதைத் தொடர்ந்து பெட்ரோலியப் பொருட்கள் கையிருப்பு தொடர்பாக தவறான செய்திகள் பரப்பப்படுவதாகவும், பொது மக்கள் இவற்றை நம்ப வேண்டாம் என்றும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. கச்சா எண்ணெய் 40 நாடுகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுவதாகவும் குறைந்த விலையில் கச்சா எண்ணெய் வழங்கும் நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகவும், பெட்ரோலியத் துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறி உள்ளது.

மானியமில்லா சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 60 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. வணிக பயன்பாட்டிற்கான சமையில் எரிவாயு விலையும் சிலிண்ட்ருக்கு 115 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

மக்கள் மருந்தக தினம்

மக்கள் மருந்தக தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மக்கள் மருந்தக தினம் குறித்த மேலும் சில தகவல்கள்....

(வாய்ஸ்)

தரமான பொதுவான மருந்துகள் அனைவருக்கும் மலிவு விலையில் கிடைப்பதை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசின் ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சகத்தின் மருந்து துறையால் 2008-ஆம் ஆண்டு நாடு முழுவதும் மக்கள் மருந்தக திட்டம் தொடங்கப்பட்டது.

தொற்று நோய் எதிர்ப்பு, நீரிழிவு நோய், புற்று நோய் எதிர்ப்பு உள்ளிட்ட அனைத்து முக்கிய சிகிச்சைப் பிரிவுகளிலும் 700-க்கும் மேற்பட்ட மருந்துகள், 154 வகையான அறுவை சிகிச்சைகளுக்கு தேவையான நுகர் பொருட்களும் இந்த மருந்தகங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

மக்கள் மருந்தக தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி கோடிக் கணக்கான மக்களின் மருத்துவ செலவுகளை இந்த மருந்தகங்கள் கணிசமாக குறைத்துள்ளதாக கருத்து வெளியிட்டுள்ளார். மேலும், நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய சுகாதார துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா வெளியிட்டுள்ள செய்தியில் நாடு முழுவதும் 18 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு

வருவதாகவும், இதன் மூலம் நாள்தோறும் 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன் அடைந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். நகர்ப்புறங்கள் மட்டுமின்றி ஊரகப் பகுதிகளிலும் மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக கூறிய திரு நட்டா சிகிச்சைக்கான செலவினங்களைக் குறைப்பதில் இந்த மருந்தகங்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும்

தெரிவித்தார். இந்த மருத்தகங்கள் மூலம் 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மக்களுக்கு சேமிப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்கள் மருந்தக திட்ட பயனாளிகள் அனைவருக்கும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு மருந்துகளின் நிதிச் சுமையில் இருந்து விடுபடவும் பொதுவான மருந்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத்திட்டம் உதவி வருவதாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் புதிய கிரீன் பீல்ட் விமான நிலையத்திற்கு மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா இன்று காணொளி காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் காணொளி வாயிலாக கலந்து கொண்ட பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டில் 2014-ஆம் ஆண்டுக்கு முன்பு சுமார் 70 விமானநிலையங்கள் இருந்தன என்றும் தற்போது இவை 160-க்கும் அதிகமாக உள்ளதாகவும் கூறினார். மேலும் விமானநிலையங்களின் வளர்ச்சி, இணைப்புகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அருகில் உள்ள நகரங்கள், சுற்றுலா, தொழில் உள்ளிட்டவற்றையும் மேம்படுத்துவதாக தெரிவித்தார்.

விமான நிலையத்தின் பணிகள் 2 ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என்றும் பின்னர் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்றும் மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு கூறினார்.

கோட்டா ஏற்கனவே வலுவான சாலை மற்றும் ரயில் இணைப்பை கொண்டுள்ளது என்றும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள விமான இணைப்பு பணிகள் மூலம் இப்பகுதிகளில் தொழில் மற்றும் மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா தெரிவித்தார்.

*கிரிக்கெட்*

இந்தியா மற்றும் இலங்கையில் கடந்த மாதம் 7-ஆம் தேதி தொடங்கிய 10-ஆவது டி-20 ஆடவர் கிரிக்கெட் உலக கோப்பை தொடரின் இறுதிப் போட்டி இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே நாளை இரவு 7 மணிக்கு அகமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் தொடங்குகிறது. 3-ஆவது முறையாக உலக கோப்பையை வெல்ல இந்தியாவும், முதல் முறையாக வெல்லும் கனவோடு நியுசிலாந்தும் களமிறங்க உள்ளன. 2007-மற்றும் 2024-ஆம் ஆண்டுகளில் இந்தியா உலக கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

*வானிலை*

மன்னார்வளைகுடா மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று முதல் வரும் 10-ஆம் தேதி வரை நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மற்றும் தமிழ்நாடு, புதுச்சேரி, ஆகிய பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக் கூடும் என்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் நாளை முதல் 9-ஆம் தேதி வரை லேசான மழை பெய்யக் கூடும். இதனிடையே தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் குறைந்த பட்ச வெப்பநிலை படிப்படியாக உயர்ந்து இயல்பை விட அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

சந்தாலி கலாச்சாரம் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் நல்லிணக்கத்தில் ஆழமாக வேறூன்றி உள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

டி-20 ஆடவர் உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி அகமதாபாத்தில் இந்தியா-நியுசிலாந்து அணிகளுக்கு இடையே நாளை நடைபெற உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

--------------------------------